1992 ஏப்ரல் 3]

யினை மனப்பூர்வமாக, உளப்பூர்வமாக, இதய பூர்வமாக தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்படி உடனடியாக அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய உத்தரவுப்படி நாங்கள் எப்போதும் நடப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

456—

வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

*4095 திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வணிகர் நல வாரியத்தில் (Traders welfare Board) இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இவ்வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து இன்னும் அதிக அளவிற்கு விளம்பரம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வணிகர் நல வாரியத்தில் இதுவரையில் 3,147 வணிகர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்,

(ஆ) இந்த வாரியத்தின் நலன் குறித்து, தமிழ்ப் பேப்பர்களில் வெளியிடப்பட்டுள்ளது,

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு எவ்வளவு கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசில் வணிகர்களாகப் பதிவு செய்து கொள்பவர்கள், ஆண்டுச் சந்தாவ 25 ரூபாய் செலுத்தி உறுப்பினர்களாக ஆகலாம்,

[1992 ஏப்ரல் 3

முற்பகல் 9–35

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வணிகர் நல வாரியத்தில் இதுவரை 3,500 க்கும் குறைவாகவே உறுப்பினர்கள் சேர்ந்திருப்பதாக இங்கே தெரிவித்தார்கள், வாரியத்தில் சேருவதனால் கிடைக்கும் பலன்களைப் பற்றி, இன்னும் கூடுதலாக நமது வியாபாரிகள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் தெரியப்படுத்தினால், இந்த வாரியத்தில் சேரக்கூடிய உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாக வாய்ப்பு இருக்கிறது. எனவே, இதை அதிகப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முதலிலேயே செய்தித்தாளிலே வந்து இருக்கிறது, இந்த வாரியத்தில் அவர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு என்னென்ன நன்மைகள் என்பது அங்கேயிருக்கின்ற வணிகர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், வணிகர்களுக்குத் தெரிந்த விஷயத்தை திருப்பிச் சொல்லத் தேவையில்லை என்று தான் சொல்லவில்லை, தேவைப்பட்டால் அறிவிக்கிறோம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு, சி, ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சட்டமன்ற உறுப்பினர்கள் யாரையும் இந்த வணிகர்கள் நல வாரியத்திலே உறுப்பினர் ஆக்காமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்தில் பல்வேறு விவரங்களை எடுத்துப் பேசுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன, அதைப்போல, வணிகர்களைப் பற்றி நல்லதும் கெட்டதும் தெரிவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன, ஆகையினால் வணிகர்களை மட்டுமே போட்டால், அவர்களைப் பற்றிப் பேசுவார்கள் என்பதற்காகத்தான் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்,

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாநில அளவில் இருப்பதைப் போல வணிகர் நல வாரியத்தை மாவட்ட அளவிலே, அதாவது ஒரு டிஸ்ட்டிரிக்ட் போர்ட் ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொது மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று எண்ணித்தான் மாவட்டந்தோறும் அவைகளை நீடிக்க வேண்டும். ஆனால், வணிகர்களுக்குச் செய்கிறபோது, வணிகர்கள் இன்றைக்கு 3,000 பேர்கள்தான் வந்திருக்கிறார்கள். ஒரு இடத்தில் இருந்தால்தான் அதைப் பற்றி யோசித்து, அதுவும் முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இருக்கிறபோது, அது வணிகர்களுடைய நலனை நிச்சயமாகப் பாதுகாக்கும், இது மாவட்டந்தோறும் தேவையில்லை என்பதை உறுதியாகவே தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 457, திரு. ப. கலிய பெருமாள், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

457—

திருவையாறு ஒன்றியத்தில் பிற்பட்டோருக்கான மாணவர் விடுதி

*5259 திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருவையாறு ஒன்றியத்தில் பிற்பட்டோருக்கான மாணவர் விடுதி ஒன்று கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. ஏனெனில், பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி இல்லாததால், கட்டிடம் கட்டுகிற பிரச்சினை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடுதியே இல்லாமல் கட்டடம் கேட்டீர்கள் என்றால் எப்படி? விடுதி கேளுங்கள்.

திரு. ப, கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். திருவையாறு ஒன்றியத்தில் திருவையாறு பேரூராட்சியிலும், திருப்பரங்குறிச்சி பேரூராட்சியிலும் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதோடு, அரசர் குறவர் கல்லூரியும் அங்கே இருக்கின்றது. வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் அந்த அரசர் கல்லூரியிலே வந்து சேர்ந்து படிக்கிறார்கள். இந்த உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள் கிராமப் பகுதியிலே இருந்து, தொலை தூரத்திலிருந்து 6 மைல் 8 மைல் தூரம் வந்து படிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள், அந்த கிராமப் பகுதியிலே பேருந்துகள் ஒரு தடவை, இரண்டு தடவைதான் போகிறது. பேருந்தை நம்பி அல்லது சைக்கிள்